*News and Articles in Tamil and English Please send them to:*

**THE EDITOR,**

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News /

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

**Vol: 156 Jaffna, Friday 18 August 1995 No. 33**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
**THE MANAGER**
The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

LIBRARY ... OF JAFFNA
18-8-1995

## THOUGHT



The post-biblical theologian may, no doubt, possess a better astronomy, geography, zoology, psychology, physiology and so on than the biblical witnesses possessed; but as for the Word of God, he is not justified in comporting himself in relationship to those witnesses as though he knew more about the Word than they. He is neither president of a seminary, nor the Chairman of the Board of some Christian Institute of Advanced Theological Studies, who might claim some authority over the prophets and apostles. He cannot grant or refuse them a hearing as though they were colleagues on the faculty. Still less is he a high-school teacher authorized to look over their shoulder benevolently or crossly, to correct their notebooks, or to give them good, average or bad marks. Even the smallest, strangest, simplest or obscurest among the biblical witnesses has an incomparable advantage over even the most pious, scholarly and sagacious latter-day theologian. From his special point of view and in his special fashion, the witness has though, spoken, and written about the revelatory Word and act in direct confrontation with it. All subsequent theology, as well as the whole of the community that comes after the event, will never find itself in the same immediate confrontation.

**Karl Barth**

### Installation Service

The Rev. Duleep Fernando was installed as the President of the Ceylon Methodist Conference at a special service at the Methodist Church, Kollupitiya on Wednesday the 16th August. The Rev. Duleep Fernando was elected as the Chairman of the Methodist Conference at the Annual Sessions of the Conference in 1994. He served as the Acting President of the Conference after the demise of the Rev. Dr. Kingsley Muttiah on the 29th October 1994. The Rev. Duleep Fernando is the son of Mr. P. E. Fernando, a well known Methodist preacher and a retired Commisssioner of Inland Revenue and Mrs. Fernando. Methodist pastors serving in Jaffna left for Colombo on Monday the 14th August to participate at this service.

### Bank of Ceylon Increases its Interest Rates

The Bank of Ceylon has informed its customers that it has increased the rate of interest by two and a half percent: for Fixed deposits and Saving Certificates by one percent. The new rates of interest are as follows:

| | | |
|---|---|---|
| Saving Certificate | — 6 months | 13.5% |
| Saving Certificate | — 12 months | 14% |
| Fixed Deposit | — 12 months on maturity | 15% |
| Fixed Deposit | — Monthly Interest | 14.5% |
| Fixed Deposit | — 6 months on maturity | 11.5% |
| Fixed Deposit | — 3 months on maturity | 11% |
| For Rs. 1.5 million and above | — for one month | 10.5% |

### Two Persons Arrested at Pandateruppu

Two persons who went to see their houses near Fatima Church, at Pandateruppu were arrested by the Sri Lankan Army. These two persons were inhabitants of Pandateruppu and had gone to see their houses. A toddy tapper of Periyavilan was also arrested at Periyavilan by the Army while he went to tap toddy in this village. The relations of the arrested people have appealed to the Red Cross Society to contact the Sri Lankan Army and get them released.

### People of Valikamam West go to Jaffna to Sleep

After the Operation 'Leap Forward' which took place on 9th July 1995, and the rumour of another restricted Army offensive forced residents of Valikamam West especially Sithankerny, Moolai, Chulipuram, Araly West and Koddaikadu to go to Jaffna to have a peaceful rest. They return in the morning to continue their fishing, gardening and household work.

### Tellippalai Church Members Worship at Women's Centre Chapel

The members of the C. S. I Church Tellippalai were conducting their Sunday worship at a house at Chunnakam till the Sri Lankan Army advanced and occupied Alaveddy & Sandilipay villages on the 9th of July. Now the members of this Church are conducting their Sunday worship at Women's Centre, Maruthanamadam. The Rev. P. J. Suriakumar is occupying one of the houses at McLeod Hospital, Inuvil.

### New Residence for our Minister at City Mission

The Anglican Bishop of Colombo the Rt. Rev. Kenneth Fernando has permitted our minister in City Mission to use the Vicarage of Christ Church, Main Street, Jaffna as his residence. A prayer meeting was conducted at this Vicarage on Sunday the 13th of August. The Rt. Rev. Dr. S. Jebanesan, the Rt. Rev. D. J. Ambalavanar, the Rev. S. P. Nesakumar of the Anglican Church and C. S. I. Pastors serving in Jaffna town and members of City Mission Church participated at this service and in the fellowship tea that followed it.

### Teachers' Pension Anomaly Rectification Needed

Teachers community and all concerned with Education, wholeheartedly welcome the new Salary Scale for Teachers to be implemented soon by the Education Department after so many years of agitations and appeals from Teachers.

The Retired Teachers who toiled hard for long years should not be deprived of this handsome benefits. There will be a big difference in respect of pension payment between Teachers who retired from service before and after 6th October 1994-the date of implementation of the new salary scale. For example, a Trained Teacher with more than 30 years of service is entitled to a basic pension equivalent to 90 percent of Rupees 3960/=, if his/her retirement date falls before 6. 10. 94. Whereas a Teacher with identical qualification and service record retires on or after 6. 10. 94. will be entitled to a basic pension of 90 percent of Rs. 8450/=. The difference in pension payment exceeds Rs 4000/ monthly This is a very glaring and uncompromising difference. There is absolutely on justification in maintaining this enormous difference. What are the main criteria determine and necessiatet he Salary Increase of Government Servants? The Salary of Public Servants are increased from time to time to cushion the difficulties faced by the inflation and rise in Cost of Living.

It is an accepted practice in majority of countries all over the world to effect increase in pension payment to pensioners. Whenever an increase is made to Government Servants. What prompted the steep increase in salary for Teachers? The main reasons are adduced above. It does not mean that Teachers have become parexcellence overnight to deserve this increase. They toiled and worked hard to earn this new salary scale.

(Continued on page 4)

# வாழும் எழுத்துக்கள்



## வேதக்கவிவேந்தர் வேதநாயகம்

கிறித்தவ சமயத்தில் வேதநாயகர் எனப் பெரும் புகழ் படைத்த புலவர்கள் இருவர் அவர்களை ஊரால் சுருக்கமாக வேறுபடச் சுட்டிக்கொள்ளல் எளிது. (1) தஞ்சை வேதநாயகர்' என்றும், (2) 'மாயூரம் வேதநாயகர்' என்றும் வேறுபடக் கூறிக்கொள்ளலாம். இவ்விருவரேயன்றிச் சென்னையில் கிறிஸ்துவின் புகழ்பாடிய புலவர் (3) சென்னை சார்சு வேதநாயகம்' என்னும் நல்லார்

கம்பர், தாம் வாழ்ந்த காலத்தில் தமக்கு நிகரில்லாத பெரும் புலவராய்த் திகழ்ந்ததால், [கவிச் சக்கரவர்த்தி] பாவேந்தா எனப் பட்டம் பெற்றார். அதுபோன்று கிறித்தவ சமயத்தில் -- தஞ்சை வேதநாயகர், தாம் வாழ்ந்த காலத்தில் தமக்கு நிகரில்லாத பெரும் புலவராய்த் திகழ்ந்ததால்- 'சுவிசேடக் கவிராயர்' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றுத் தலைமை சிறந்தார்.

பல நகரத்தாரின் பாராட்டைப் பெற்றவர் தஞ்சை பாவேந்தர். குறவஞ்சியைக் கேட்டு, சென்னையார் ''ஞான தீபக் கவிராயர்'' என்றனர்; பக்திப்பாடல்களைக் கேட்டுத் தஞ்சையார்- ''வேதாகம சிரோன் மணி மகாஞானக் கவிச் சக்கரவத்தி'' என்றனர்; பேரின்பக் காதலைக் கேட்டு திருச்சியார் ''சாத்திரியார்'' என்றனர். அதாவது 'நூல் அறிஞர்' எனப் பொருள்படும். தரங்கையார் ''சுவிசேடக் கவிராயர்'' என்றனர்

### பேராசிரியர், பாவலர் வீ. ப. க. சுந்தரம்

இப்பட்டங்களுக்கு உரியவரா இவர்? கடல் மடை திறந்தாற் போல, கவிமழை பொழிந்தவர். தஞ்சை வேதநாயகர். சிந்தையை மகிழ்விக்கும் சந்தக்கவிகளை விந்தை விந்தையாகப் பாடியவர்; எண்ணமெல்லாம் இனிக்கும் வண்ணக் கவிகள் எண்ணற்றவைகளை எழுதியவர்.

நாளும் இன்னிசையால் ஆளும் இறைவன் இரு
தாளும் பணிந்து நெறி மீளும் படி அழைத்தார்

''ஞானம்பாடி திரிந்த வானம்பாடி'' எனலாம்.

நாடெல்லாம் திரிந்து
பாடெல்லாம் பொழிந்து
இசைக் கதை நிகழ்த்திய
இசைப் பெரும சிறந்தவர்--
மன்னர் சரபோசியின் மாட்சி சபையிலே
பலரும் புலவரோடு
பாடிவீற்றிருந்தவர்—

எனவே - தஞ்சை வேதநாயகர் தாம் வாழ்ந்த காலத்துத் தனித் தலைமையும் பெருந்தகைமையும் பூண்டு சமயம் பரப்பிய இமையப் புலவர் எனலாம்.

கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள் ஒவ்வொருவரும் ஓரிரு துறையிலே சிறந்து விளங்கியவர். கால்டுவெல் ஒப்பிலக்கண வல்லுநர்; வீரமாமுனிவர் காப்பியமும் இலக்கணமும் பரப்பிய, சங்கத் தமிழ்ப் புலவர் வரிசையில் நிற்கத்தக்கவர்; மாயூரம் மேதை வேதநாயகர் இசைத் தமிழும் கதைத் தமிழும் பரப்பியவர். இவர் கற்பனையில் கம்பர், ஒட்டக்கூத்தர், சிவப்பிரகாசர், புகழேந்தி, மாணிக்கவாசகர் வரிசையில் நிற்கின்றவர் நாட்டவரும் பெரிசும் அகராதி தொகுத்ததால் சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு இவற்றின வழிவழித் தொண்டினர், என்றி ஆல்பிரட் கிருட்டிணர் காப்பியத்தால் கம்பனையும் தேவாரத்தால் சைவ மூவரையும் ஒத்தவர். தஞ்சைக் கவிவேந்தரோ மூன்று வகையில் சிறந்தவர். இயல், இசை, நாடகம் என்னும் எனும் முத்தமிழ் வித்தகர். இயல் புலமை மின்னும் நூல்கள் ''தியானப் புலம்பலும் செபமாலையும்'' நாடகப் புலமை நாட்டிய நிலை நாட்டும் நல்ல நூல்கள்:- [1] பெத்தலேம் குறவஞ்சி, [2] ஞானத் தச்சன் நாடகம், [3] பட்டணம் நொண்டி நாடகம், [4] தெட்சண நொண்டி நாடகம்,

நற்றமிழ் தவழும் சிற்றிலக்கியங்கள் பல இயற்றினார். [1] ஞானக்கும்பி [2] பராபரன் மாலை, [3] ஞான ஏத்துப் பாட்டு, [4] கப்பற் பாட்டு முதலியன.

எண்ணற்ற கீர்த்தனைகளும் குறவஞ்சிச் சிந்துகளும் இவருடைய இசைப் புலமையை நிலை நாட்டுவன

மாயூரம் மேதை வேதநாயகரும், வீரமா முனியும், எ. ஆ. கிருட்டிணரும் தம் பாடல்களில் கற்பனை நயம் மிளிரப் பாடினார்கள். ஆனால் தஞ்சை வேதநாயகர் தம் பாடல்களில் கற்பனையை அதிகம் பொழியவில்லை. விவிலியச் செய்திகளை யாப்பு நலம் பெறப் பாடல்களாகப் பாடி வைத்துள்ளார். குறவஞ்சியில் கற்பனை காணப்படுகிறது.

கந்தரனுபூதி போன்ற ''பரமானுபூதி'' என்று ஒரு சிறு நூலைப் பாடியுள்ளார். அனுபூதி என்பது ஒன்றிக் கலந்து இன்பம் துய்த்தல்; பரமானுபூதி நூலின் பாடல்கள் எளிமையும் இனிமையும் ஒளி வீசுவன.

எம்மா நிலமும் தொழும் இரட்சகன் எம்
இம்மா னுவேல் இங்கும் இருக்கையிலே
சும்மா இருக்காது துடித்து மனம்
அம்மா பதறிக் கொள்ளல் அற்புதமே

அகப்பற்று என்பது செபமாலையின் ஒரு பகுதி, இதில் அகர வரிசையில் பாடல்கள் உள்ளன இவற்றின் ஓசையும் ஒழுக்கும் பேரின்பம் தருவன

ஆதாம் விழுந்த வினையால் உயர்ந்த
அகிலம் புரந் தருளவே
நீதே அகன்ற மனுவாய் எழுந்து
திருவாக்கங்கள் சொலியே
வேதாளம் அஞ்ச நரகம் கலங்க
வெகுபாடடைந் திகலெலாம்
வாதாடி வென்ற குருவேசு நாதர்
வரவேணும் என்றன் அகமே.

மிகவும் எளிமையாய் முதன்முதல் தமிழ் நாட்டுப் திருப்புகளைப் பாடிக்காட்டிய பெருமை தஞ்சைப் பாவேந்தர்க்கே உரியது. ''இகழ்தல் போல் புகழ்தல்'' என்பது ஓர் அணி இலக்கணம்; இதனை வடமொழியில் 'நிந்தாஸ்துதி' என்பர். இத்தகைய பல பாடல்களைக் கிறித்தவ சமயத்துக்கு அளித்துள்ளார் தஞ்சை பாவேந்தர்

அப்போஸ்தலர் தச்சன்; தாயாரோ எளிய கன்னி
யாசுதிரி சமுத்திரத்(து) அணுகி
அடர்ந்து மீன் பிடிக்கும் வலையர் உன் சீடர்;
ஆயமத கேயு உனக்(கு) அடுத்தோன்;
ஒப்பிரிய வெட்டுக் கிளியோடு தேனை
உண்டோர் ஆரணிய மெகிடந்தங்கு
ஒட்டகத் தோலை உடுத்த ஓர் இருடி
உன் தன் முன் தூதனாய் வந்தோன்;
பெரும் பாவிகளே உன் சிநேகிதர்கள்;
திவ்விய செலவிடுபவன் திருடன்,
சேவகனாய் இருந்தோன அசாத்தியக்காரன்;
சினைப்பன் கண்ணையும் கெடுத்தாய்;
இப்படிக் கொத்த கொள்ளையில் எனை நீ
எப்படிக் தாங்குவாய் ஐயா!
எழில் பெறுசீயோன் மகள் மணவாளா!
இறைவனே யேசு நாயகனே!

---

### யாழ் நகரில் ஆர்ப்பாட்ட பேரணி

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட தமிழின அழிப்பு மற்றும் பொருளாதார தடை ஆகியவற்றைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் யூலை 9ம் திகதி புதன்கிழமை ஆர்ப்பாட்டப்பேரணி நடைபெற்றது. யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஆதரவில் இந்தப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் சகல தரப்பு மக்களும் பங்குபற்றினர். பேரணியின் போது செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரதிநிதியூடாகவும் அரச அதிபரின் பிரதிநிதியூடாகவும் ஜனாதிபதிக்கு மகஜரின் பிரதி அனுப்பிவைக்கப்பட்டது மகஜரின் பிரதிகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்டதாக தெரிகிறது.

தாரகை ஒளி

படியாத பெண்ணினால் தீமை — என்ன
பயன் விளைப்பாள் அந்த மங்கை — பாரதிதாசன்

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை

Estd. 1841

மலர்: 156 18-08-1995 இதழ்: 33

## பொருளாதாரத் தடை

இன்று உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்ற உள்நாட்டுப் போர்களில் இலங்கையில் நடைபெறுகின்ற உள்நாட்டுப் போர் மிகவும் மோசமானதும் பயங்கரமானதும் என்பது ஆய்வாளர்களுடைய கருத்து.

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வெற்றி கொள்ளல் வேண்டுமென அரசாங்கம் முனைந்து நிற்கின்றது.

நமது நாட்டிலே உள் நாட்டுப் போர் கடந்த 12 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும் பொருளாதாரத்தடையை எந்த அரசும் இது வரை யேற்கொள்ளவில்லை. ஆனால் இப்பொழுது பொருளாதாரத் தடை பற்றிய அச்சம், தமிழ் மக்கள் மத்தியிலே பரவலாகத் தோன்றியுள்ளது. மக்களைப் பட்டினி போட்டு சரணாகதி அடையச் செய்வது, இந்தக் கொள்கையினுடைய நோக்கம். உலகின் பல்வேறு காலங்களில் பல்வேறு அரசுகள் இந்த முயற்சியில் ஈடுபட்டுத் தமது எதிரிகளை வெற்றிக்கொள்ள முனைந்திருக்கின்றன.

இன்றைய அரசு இப்படியான ஒரு திட்டத்தை பரிசீலித்து வருவதாக செய்திகளில் இருந்து ஊகிக்க முடிகின்றது. இது வரை காலமும் அரசாங்கம் பொருளாதாரத் தடையை மேற்கொள்ளாமைக்குக் காரணம் தமிழ்மக்கள் மீது கொண்டிருந்த அன்பு அன்று, தமிழ் மக்கள் மீது அவர்கள் எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார்கள் என்பதனை கடந்த கால யுத்த நடவடிக்கைகள் நமக்கு காட்டுகின்றன.

''தலையின் மேற்க குண்டைப் போடுகின்றீர்''
தலலைப ஈசன் படைத்தது இதற்காமோ

என்று ஒரு கவிஞன் மனதுருகிப் பாடியதைப்போல் பல்லாயிரக்கணக்கான மக்கள் அரசாங்கத்தினால் வரும் துன்பத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர் அரசாங்கம் இதுவரை காலமும் ஓரளவிற்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பதன் காரணம் சர்வதேச நெருக்குதலேயாகும். உலகத்திற்கு தான் ஒரு பரோபகார சிந்தையுள்ள அரசு என்றும், எதிரிகளுக்கும் அருள் பாலிக்கும் தார்மீக அமைப்பு என்றும், காட்டிக்கொள்ளவே அரசாங்கம் பிரயத்தனம் செய்தது.

ஆனால் இப்பொழுது தனது கடைசி அஸ்திரத்தையும் உபயோகிக்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்று எண்ணுகின்றது. மக்களைப் பட்டினியோடுவதால் அவர்கள் சலிப்படைந்து அடங்கி ஒடுங்குவபர் என்று அரசாங்கம் எண்ணுகின்றது

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழ்மக்களுக்கு ஒரு முக்கியமான கடமையிருக்கின்றது.

முதலாவதாக, வர்த்தகர்கள் கொள்ளைலாபம் அடிக்கும் எண்ணத்துடன் பதுக்குகின்ற வேலையை விட்டுவிட வேண்டும். பொது மக்கள் இக்கால கட்டத்திலே வீண் விரயத்தை முற்றாக அகற்றவேண்டும். களியாட்டங்கள் வைபவங்கள் என்பனவற்றைக் குறைத்து, தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளை மட்டும் நடத்தவேண்டும்.

அந்த நிகழ்ச்சிகளிலும் உள்ளூரில் தயாரிக்கப்படும் பானங்களுக்கும், உணவுப் பொருட்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டு.

சிக்கனமாக வாழ்வது தமிழ் மக்களுடைய தனிச் சிறப்பு. ஆனால் இப்பொழுது இந்தப் பண்பு சிறிது சிறிதாக மறைந்தொழிவதனை நாம் காண்கிறோம்.

### மீண்டும் ஷெல்

வலிகாமம் வடக்கு. வலிகாமம் மேற்குப் பகுதிகளில் படையினர் ஆகஸ்ட் 10ம் திகதி ஷெல் தாக்குதலகளை மேற்கொண்டனர். இத் தாக்குதலின் போது ஐவர் காயமடைந்ததாகவும், வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்ததாகவும், நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. தொட்டிலடி, நிச்சாமம், ண்டத்தரிப்பு, டெலியடைப்பு சங்கானை, பகுதிகளை நோக்கியே ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### பெண்கள் இல்ல திறப்பு விழா

தென் இந்திய திருச்சபை முருகண்டி திருச்சபை வளாகத்திற்குள் ஒரு பெண்கள் இல்லம் பேராருட் திரு. கலாநிதி எஸ். ஜெபநேசனால் அவர்களால் யூலை மாதம் 7ம் திகதி மாலை 4 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது ஜே மனியிலுள்ள K. N H தாபனத்தால் 40 பிள்ளைகளை பராமரிப்பதற்கு உதவிகள் வழங்கப்படும். இவ் வைபவத்தைத் தொடர்ந்து ஒரு பொது கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டம் அத்தியட்சரின் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. திருவணசவரிமுத்து அன்ரனி அவர்கள்தலைமை தாங்கினார். சிறப்புவிருந்தினர்ளாக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. G. இராஜநாயகம் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவை சங்கத் தலைவர் திரு. சிவராசலிங்கம், சேயர் தாபன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் செல்வி மோரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# செய்திச் சிதறல்

### சுன்னாகம் சந்தை செயலிழப்பு

கடந்த மாதம் யூலை 9ம் திகதி நடைபெற்ற 'முன்னேறிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் பின்னர் சுன்னாகம் சந்தை சேதமடைந்தும் செயழிலந்தும் வெறிச் சோடி கிடக்கிறது. இதனால் வலிகாமம கிழக்கு வலிகாமம் வடக்கு வலிகாமம் தெற்கு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

### மகிமைக்குள் உயர்த்தப்பட்டார் புளோரன்ஸ் டேவிட்

இவர் காலஞ்சென்ற இரட்சணிய சேனையைச் சேர்ந்த பிரிகேடியர் திரு திருமதி வை. டேவிட் அவர்களின் அன்பு மகள் புளோரன்ஸ் டேவிட் (இரட்சணிய சேனை) கொழும்பில் 10-6-95-ல் காலமானார்.

இவர் பிறாங்கிளின் டேவிட் (இரட்சணியசேனை தலைமைக் காரியாலயம்) வெஸ்லி டேவிட் அ. மி. அசசம் வட்டுக் கோட்டை), நேசமணி டேவிட் (வை. டபிள்யூ சீ. ஏ,), அருள் நேசன் டேவிட் (குவைத்), ஸ்ரான்லி டேவிட் (மே. ஜெர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை சேணல் வி. ஸ்கின்னர் அவர்களின் தலைமையில் நடை பெற்றது.

### திருவும் அருள் திருவும்



அருள்திரு: என்ன ராஜரத்தினம் அங்கள் மருமகக்கலியாணம் பேசுகிறாராம சீதனம் எப்படியாம்?

திரு: 4 பரப்பு மண்ணெண்ணை 1 கான் தண்ணர் 1 லீட்டர் பெற்றோல் இருக்குதென்று கேள்வி

மணிமாறன்

விருந்தோம்பல் நமது பண்பு; துரதிஷ்டவசமாக விருந்தோம்பலை விருந்தினர் பலர் தவறாகப் புரிந்துகொள்கின்றனர்.

தென் இலங்கையிலிருந்து வந்த சிலர் யாழ்பாணத்தில் உணவுத்தட்டுப்பாடு இருப்பதாகவே தெரியவில்லை என்று கூறியுள்ளனர். உணவு பயிரிடுவதிலும் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இரண்டாவது மகா யுத்தத்தின்போது 'அதிக உணவு பயிரிடுக' என்பது ஒரு முக்கியமான சுலோகமாக விளங்கியது. இன்று நமக்குக் கிடைத்துள்ள நிலப்பரப்பில் கூடியளவு உணவை பயிரிட்டு உயிர்களை காப்பாற்றுவது அவசியமாகும்.

மக்களும் குறிப்பாக குழந்தைகளுந்தான் தமது நாட்டின் தலை சிறந்த செல்வங்கள். இவர்களை காப்பாற்றுவதில் கவனம் செலுத்துவோமாக.

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai 18.08.1995


## EDITORIAL

### The Prodigal Son



Luke 15:11-32

In all societies there are people who could be called as prodigals. But when the story as found in the Gospel. it it conveys a higher truth which has to do with both human beings and God. This is a parable which focuses to much attention on the son, but actually it is a loving father who is the star character in the story and in a way the father stands for God's steadfast love or Agape as Bishop Nygren in his book charactarizes this love. Jewish society is not a permissive society where children could do what they like as it is in western countries today. The children were instructed not only in religious laws but also moral laws. The importance in this story lies in the fact that the second son dares to ask his father for his share of the patrimony which is one-third to be given before the father dies or volunteers to give. This father who loves his son does not refuse but gives up his share for him to do whatever he wants to do with it. The second son after realizing his property, leaves to a far country out of sight from his father and brother also a land which is not under the Jewish God. According to Jewish religious thinking, their God chose only Jerusalem and Mount Zion for his dwelling place. Thus he had avoided both his natural father and God as well. In the far country, he leads a lavish life as he desired with his company of friends. But sinc he was not gainfully employed, his money started to fritter away. So it is quite natural his friends also started to disappear from him. The worst thing happened there was a famine in the country, he was driven by hunger, Although a Jew to attach himself to a pig farmer which to a Jew is a curse. However in that state he realizes the plenty of food in his father's house and desires even to take up the position of a hired servant in his father's house, not that of a son. This shows when he is desperate, he sees the love the father has bestowed; a state of repentance from pride and arrogance. Fallen man though a sinner yet God seeks to salvage him. When he returns home he says "I will say to my father, I am not worthy of being called your son, make me a hired servant" Before he could utter these words the father embraces him, calls for new robes, a ring which is a sign of authority and dignity. The fatted kine is killed, there was feasting and merrymaking, but the eldest son who was coming, called a slave to find out all what was taking place in his father's house. He refuses to enter the house; he stands as the Pharisies the self righteous lot who refused to do anything with sinners who had broken the law. Jesus says, God loves the sinner, but not his sins.

That is how God rejoices over one sinner who repents. But this eldest son does not want to take part in the rejoicing, the father pleads with him saying this my son was lost, but is found, he was thought to be dead but alive, come in he says. But the eldest son refers to his brothers as 'your son' to his father and adds who wasted his wealth on "brother" which is not at all found in the verses. This above false accusation of his own brother whom God accepts in spite of his prodigality. There is more love and forgivenese to fallen man in the sight of God than morthodox religious people who like the Pharisies will push a person into the gutters. What happens to the eldest son remains in suspense like in all modern novels. However, the main strees is God's love can defeat all the evil nature of man if he returns to Him in spite of all his rebellion. Before this parable, two more parables are placed to heighten the same theme. One is that of the lost sheep which has no faculty to reason out things by itself. However, the shepherd rejoices when it is found. There is rejoicing by the shepherd's friends and neighbours. If a human shepherd rejoices over a lost sheep, how much more God the Shepherd of all mankind rejoice over one sinner who repents. Next we find the woman rejoicing with her friends and neighbours over a lost coin which is only an inanimate thing, yet she rejoices. How much more will God rejoice over one sinner who returns or repents. But in the story of the prodigal son, God confers on him the status as when he was with him and makes a great feast like all human beings when they recover their lost possessions says Jesus. Because man is the possession of God he is made in God's image, both male and female (Genesis 1 : 27). This chapter 15 in the Lucan Gospel says Professor Lorssenthe, first Principal of United Theological College, Bangalore, is sufficient to know why Jesus came to the world even if all other Gospels and the whole New Testament is lost to the world.

S. P. J.

## Director for Ecumenical Relations in our Synod

Rev. Dr. B. S. Devamani has been appointed to the post and he has assumed office as the new Director. As some of you will remember, he served as Director of our Pastoral Aid Department from 1984 to 1990 when he left for the U.S. for higher study. He obtained his D. Min. from the Chicago Theological Seminary.

Rev. Devamani will be responsible for Bilateral Relations, Exchange Visits, Union Negotiations and matters relating to the Joint Council of CSI-CNI-Mar Thoma Church.

## OBITUARY

### Vythilingam Jeyaratnam

The death occurred on Tuesday, 8th August of Mr. Vythilingam Jeyaratnam of Erlalai South. The funeral took place on the following day at his residence. The Rev. C. T. Roberts, the Circuit pastor of Erlalai South conducted the service. Tributes were paid by the Rev A. V. Jesuthasan and Mr. S. J. Manickam. The remains were then removed to Erlalai South cemetery for interment.

Mr. Jeyaratnam was the son of the late Alfred Thambiah Vythilingam and Mrs. Nagulambihai Vythilingam of Erlalai South. Besides his mother, he leaves behind Gunaratnam, Thavaratnam and Jebaratnam (brothers) and Gnanamalar, Sakunthalamalar and Rosemalar (sisters)

### Mrs. Rasamany Thurairatnam

We are sorry to record the death of Mrs. Rasamany Thurairatnam of Araly North which took place on Thursday the 10th August. She was the wife of the late Thurairatnam of Araly. The funeral took place at the residence of his eldest son at Kopay on Saturday the 12th August.

She leaves behind Jesuthasan, Thevathasan and Vijayathasan (sons) and a large number of relations to bemoan her death.

## Teachers' Pension...

(Continued from page 1)

As such the valuable service rendered by Retired Teachers should be taken into consideration in determining their pension payment.

It will be illogical and ungrateful to continue to give the same pension to Retired Teachers without any increase, while their junior counter-parts enjoy a substantial increase in their emoluments.

The Authorities Concerned should view this humane and sensitive issue with most kind and sympathetic cosideration and Rectify the excisting anomaly. Retired Teachers are eagerly anticipating a just and fair play from the authorities.

P. S. Gnanaseelan,
(Retired Teacher)
Station Lane,
Chavakachcheri.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 18th of August 1995 and published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.